**நாமக்கல் மாவட்டம்**

**தொழிலாளர்கள் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் ஆகிய உணவு பொருட்கள் தொகுப்பினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் வழங்கினார்.**

------------------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா வைரஸ் பாதிப்பை கட்டுபடுத்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து பதிவு நடப்பில் உள்ள தொழிலாளர்களுக்கு நிவாரண உணவு பொருட்கள் வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், காவல் கண்காணிப்பாளர் திரு.அர.அருளரசு இ.கா.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று (16.04.2020) நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொழிலாளர்கள் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி, 1கிலோ பருப்பு மற்றும் 1 லிட்டர் சமையல் எண்ணெய் ஆகிய உணவு பொருட்கள் தொகுப்பினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் வழங்கினார்.

பின்னர், நாமக்கல் மருத்துவ கல்லூரி அமையவுள்ள இடத்தில் மருத்துவ கல்லூரி கட்டுமான தொழிலுக்காக வந்துள்ள வெளிமாநில தொழிலாளர்களுக்கு, தமிழ்நாடு அரசின் தொழிலாளர்கள் நலத்துறையின் மூலம் செயல்பட்டுவரும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை சார்பில் 15 கிலோ அரிசி, 1கிலோ பருப்பு மற்றும் 1 லிட்டர் சமையல் எண்ணெய் ஆகிய உணவு பொருட்கள் தொகுப்பினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.பொ.பாலமுருகன், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) திரு.தே.ஞானவேல், துணை இயக்குநர் கட்டிடம் மற்றும் இதர கட்டுமானங்கள் திரு.தினகரன் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.